# அரக்கோணம் நகராட்சி
## சாதாரண நகர மன்ற கூட்ட அறிவிப்பு

கூட்ட எண்.28 நாள். 17.10.2023.

பொருள் : நகர மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள்: 20.10.2023 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு சாதாரண கூட்டம் நடைபெறுதல் – அறிவித்தல் – சம்மந்தமாக.

&&&&&

அரக்கோணம் நகராட்சி நகரமன்றம் சாதாரண கூட்டம் 20.10.2023 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் நகரமன்ற கூடத்தில், நகரமன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் சாதாரண கூட்டத்தில் நகரமன்ற துணை தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் அன்பார்ந்த

(ஒம்)/–திருமதி.லட்சுமி பாரி,
நகரமன்ற தலைவர்
அரக்கோணம் நகராட்சி

இடம் : அரக்கோணம் நகராட்சி

நாள் :17.10.2023.

<u>பொருள் எண். 1</u>

நகராட்சி ஆணையர் (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் ஆகஸ்டு மற்றும் செப்டம்பர்–2023ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.449 நாள். 20.10.2023**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

<u>பொருள் எண். 2</u>

அரக்கோணம் நகராட்சி 2011ம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 78,395 மக்கள் தொகை கொண்டதாகும். 2021ம் ஆணடு நிலவரப்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 90890 ஆகும். வேலூர் கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் 3.00 MLD குடிநீரும், அரக்கோணம் – திருத்தணி கூட்டு குடிநீர் திட்டம் (திருப்பாற்கடல்) மூலம் 0.50 MLD, தக்கோலம் நீரேற்றும் நிலையம் மூலம் 4.00 MLD மற்றும் கல்லாறு நீரேற்றும் நிலையம் மூலம் 1.00 MLD ஆக மொத்தம் 8.50 MLD குடிநீர் தினசரி பெறப்பட்டு சராசரியாக நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 94 லிட்டர் வீதம் ஒரு நாள் விட்டு ஒரு நாள் இடைவெளியில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

பாதாள சாக்கடை திட்டப் பணிகள் நடைபெற்று பயன்பாட்டிற்கு வரும் போது நகாரட்சி பகுதியில் நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 135 லிட்டர் வீதம் குடிநீர் வழங்க வேண்டியுள்ளது. அதன்படி தற்போதைய மக்கள் தொகைக்கு ஏற்ப நகராட்சிக்கு நாளொன்றுக்கு 12.27 MLD குடிநீர் தேவைப்படுகிறது. ஏற்கனவே 8.50 MLD குடிநீர் தினசரி பெறப்படும் நிலையில் தற்போதுள்ள மக்கள் தொகை கணக்கீட்டின்படி தினசரி 135 LPCD வழங்க கூடுதலாக 5.27 MLD குடிநீர் தேவைப்படுகிறது.

நகராட்சி பகுதிகளில் உள்ள 10 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளின் மூலம் 28.95 இலட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நகரப்பகுதிகளில் உள்ள கடைசி பகுதிகளில் (Tail end) உள்ள வீடுகளுக்கு வழங்கப்படும் குடிநீர் பைப்களில் போதிய அழுத்தம் இல்லாத காரணத்தினால் 188 வால்வுகள் மூலம் 10 மண்டல பகுதிகளாக பிரிக்கப்பட்டு குடிநீர் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்டவாறு குடிநீர் விநியோகம் செய்ய 5.27MLD இடைவெளி இருப்பதாலும், போதிய அளவு கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் இல்லாத காரணத்தினாலும் தினசரி குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. எனவே தற்போது உள்ள தக்கோலம் மற்றும் கல்லாறு தலைமை நீரேற்று நிலையத்தில் மற்றும் திருப்பாற்கடல் பகுதியில் கூடுதலாக நீர் ஆதாரம் கட்டமைப்பு ஏற்படுத்தி புதியதாக பிரதான குழாய்கள் அமைத்தும் நகரப்பகுதிகளில் கூடுதலாக மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள், கீழ்நிலை நீர்தேக்க தொட்டிகள் மற்றும் பழுதடைந்த பகிர்மான குழாய்களை புதியதாக மாற்றி அமைக்கும் பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கையினை ULTIMA ENVIRONMENTAL SOLUTION PVT. LTD. சென்னை என்ற தனியர் (Consultancy) நிறுவனத்தின் மூலம் தயார் செய்திடவும், அதற்கான ஆலோசனை கட்டணம் (Consultancy Fees) தயார் செய்யப்படும் மதிப்பீட்டில் 1.25 சதவீதம் வழங்கி மேற்படி நிறுவனத்தின் மூலம் செய்து முடிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : குடிநீர் பணியின் அவசியத்தை கருதியும், எதிர் வரும் கோடை காலத்தினை கருதித்தில் கொண்டும் மேற்படி பணிக்கான நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.692/2023/இ1)

**தீர்மானம் எண்.450 நாள். 20.10.2023**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

**<u>பொருள் எண். 3</u>**

இந்நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் தெருவிளக்குகளை மின்சேமிப்பு விளக்குகளாக மாற்றம் செய்ய தீர்மாணிக்கப்பட்டு அவ்வாறே 2053 எண்ணிக்கை தெருவிளக்குகளை ஒளிரும் மின்சேமிப்பு விளக்குகளாக மாற்றம் செய்ய ரூ.195.16 இலட்சம் கடன் மான்யமாக மாநில நகர்ப்புற கட்டமைப்பு வளர்ச்சி நிதி (SUIDF) திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நகர்ப்புற கட்டமைப்பு நிதிச்சேவை (TUFDCO) மூலம் விடுவிக்க அரசாணை எண்.145 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்ஏ2) நாள் 14.10.2022–ல் உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்காணும் கடன் மான்யத்தொகை 6 ஆண்டுகளில் 5 சதவீத ஆண்டு வட்டியுடன் திருப்பி செலுத்தும் வகையில் கடன் தொகை விடுவிக்கப்பட உள்ளது. மேற்காணும் மின்சேமிப்பு விளக்குகளை கடன் மூலம் பெற்று பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வஎண். | அடிப்படை வசதி தலைப்பு | பணிகளின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் ரூ. |
|---|---|---|---|
| 1 | தெரு விளக்குகள் | அரக்கோணம் நகராட்சியில் தெருவளிக்குகளை மின்சேமிப்பு விளக்குகளாக மாற்றம் செய்தல் பணி | 195.16 |
| | | **மொத்தம் ரூ.** | **195.16** |

அலுவலக குறிப்பு:

1) 2022–23 திருத்திய வரவு செலவு திட்டத்தின் கீழ் மன்றம் அனுமதி வழங்கலாம் .
2) மேற்காணும் மின் சேமிப்பு விளக்குகளை அமைப்பதன் மூலம் பின்வரும் காலங்களில் மின் சேமிப்பு ஏற்படும் என்பதால் கடன் நிர்ணயம் செய்யப்பட்ட வட்டியுடன் பெற்று திட்டத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3) ஒதுக்கீடு செய்யப்பட்ட 2053 தெருவிளக்குகளில் 1768 எண்ணிக்கை 20w எல்இடி விளக்குகளாகவும், 102 எண்ணிக்கை 40w எல் டி விளக்குகளாகவும், 46 எண்ணிக்கை 90w எல் டி விளக்குகளாகவும், 137 எண்ணிக்கை 120w எல் இ டி விளக்குகளாகவும், மாற்றம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்,1119/2022/இ1)

**தீர்மானம் எண்.450** **நாள். 20.10.2023**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

**<u>பொருள் எண்.4</u>**

அரக்கோணம் நகராட்சி குடிநீர் விநியோகத்திற்காக தக்கோலம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து ஜூபிலி ரோடு மேல்நிலை நீர் தேக்க தொட்டி மற்றும் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் உந்தப்படும் 550 mm (18") குடிநீர் உந்து குழாய் பொய்ப்பாக்கம் அருகில் 07.09.2023 அன்று மாலை சுமார் 4.00 மணியளவில் உடைப்பு ஏற்பட்டதால் நகரின் குடிநீர் விநியோகம் பெருமளவில் பாதிப்பு ஏற்பட்டது. மேற்படி உடைப்பை உடனடியாக சரி செய்ய வேண்டிய சூழ்நிலையில், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 57 (7)–ன்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி இந்நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.R.சண்முகம் என்பவரின் மூலம் உடைப்பினை சீர் செய்யும் பணியினை ரூ.2.00 இலட்சம் செலவினம் குடிநீர்நிதியின் மூலம் செய்து முடிக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.451** **நாள். 20.10.2023**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண். 05</u>**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.09ல் மோசூர் ரோடு பகுதியில் அமைந்துள்ள சமுதாய கழிப்பிடத்தில் நடைபாதை அமைத்தல் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.1.60 இலட்சம் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.452** **நாள். 20.10.2023**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

**<u>பொருள் எண். 06</u>**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான தக்கோலம் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 125 குதிரை திறன் கொண்ட மின் மோட்டார் Unit –1க்குரிய Starter பழுதுதடைந்துள்ளது. மேற்படி பழுதினை கீழ்காணும் உதிரிபாகங்கள் கொண்டு சரி செய்ய வேண்டியுள்ளது.

தற்சமயம் Unit –2 மட்டுமே தொடர்ந்து 24 மணி நேரமும் இயக்கப்பட்டு வருகிறது. எனவே குடிநீர் பணியின் அவசியம் அவசரம் கருதி உடன் பழுதினை உடன் சரி செய்ய வேண்டி உள்ளது. மேற்படி பழுது நீக்கம் செய்ய ஆகும் உதிரிபாகங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தரப்படுத்தப்பட்ட விலை பட்டியலில் விலைவிகிதத்தில் இல்லாத காரணத்தால் இந்நகராட்சியில் பெறப்பட்டுள்ள விலை விகிதத்தின்படி ஒப்பந்தப்புள்ளி கோரி மேற்படி குடிநீர் பணியினை செய்து முடிக்கவும், அதற்கான செலவினம் ரூ.1.87 இலட்சம் குடிநீர் நிதியின் மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.453** **நாள். 20.10.2023**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

**<u>பொருள் எண். 07</u>**

அரக்கோணம் நகராட்சியின் குடிநீர் ஆதாரமாக உள்ள கல்லாறு மற்றும் தக்கோலம் தலைமை நீரேற்ற நிலையத்திலிருந்து நகரின் அனை த்து பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் கீழ்காணும் விவரப்படி குடிநிர் பயன்பாட்டிற்காக மின்மோட்டார்கள் தற்போது இயக்கப்பட்டு வருகிறது.

**<u>தக்கோலம் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள ஆழ்துளை மற்றும் மோட்டர்களின் விவரம் :–</u>**

| வ.எண் | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| | ஆழ்துளை கிணறு | 14 |
| 1 | 12.50 HP மோட்டார் | 1 |

| | | |
|---|---|---|
| 2 | 10 HP மோட்டார் | 13 |

<u>**கல்லாறு தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள ஆழ்துளை மற்றும் மோட்டர்களின் விவரம் :–**</u>

| வ.எண் | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| | ஆழ்துளை கிணறு | 7 |
| 1 | திறந்தவெளி கிணறு | 1 |
| 2 | தரைமட்ட தொட்டியில் உள்ள 5 HP மோட்டார் | 7 |
| 3 | 7.25 HP மோட்டார் | 1 |
| 4 | 20 HP மோட்டார் | 1 |

மேற்படி மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகள் சரி செய்ய மற்றும் மோட்டார் காயில் கட்ட போன்ற பராமரிப்பு பணிகள் தனியார் சேவையை பயன்படுத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் கீழ்காணும் மின்சாதன பொருட்கள் அலுவலக இருப்பில் இல்லாத காரணத்தால் புதியதாக வாங்கி பழுது ஏற்படும் காலங்களில் மாற்றி குடிநீர் தடையின்றி பொது மக்களுக்கு விநியோகம் செய்ய கீழ்காணும் மின் உதிரி பாகங்கள் கொள்முதல் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ. 3.40 லட்சம் ஆகும் குடிநீர் நிதியின் மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விவரம் |
|---|---|
| 1 | 3 Core Flat type cable 6 Sqmm |
| 2 | 3 Phase Panel Board Starter (Oil) |
| 3 | Three Phase Panel Board (DOC) |
| 4 | 200 Amp Porcelain Fuse Unit |
| 5 | 100 Amp Fuse Unit |
| 6 | 32 Amp Fuse Unit |

அலுவலக குறிப்பு : குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.454** **நாள். 20.10.2023**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

<u>பொருள் எண். 08</u>

அரக்கோணம் நகராட்சி 01.10.1958 முதல் மூன்றாம் நிலை நகராட்சியாகவும், 01.05.1974 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாகவும், 17.04.1984 முதல் முதல்நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு இந்நகராட்சியின் பரப்பளவு 9.06 சதுர கிலோ மீட்டரில் 36 வார்டுகளாக பிரிக்கப்பட்டு 36 நகரமன்ற உறுப்பினர்களுடன் தற்போது செயல்பட்டு வருகிறது.

இந்நகராட்சி வளர்ந்து வரும் சூழ்நிலையை அடிப்படையாக கொண்டு அரசாணை (நிலை)எண். 113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 30.08.2019ல் குறிப்பிட்டுள்ளவாறு தற்போது முதல் நிலை நகராட்சியாக இயங்கி வரும் இந்நகராட்சியினை தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்துவதற்கு போதிய வருமானமாக 2021–2022 ஆம் ஆண்டில் ரூ.1469.00 இலட்சமாக உள்ளதாலும், நடப்பு சராசரி மக்கள் தொகை 90890 உள்ளதாலும், அரக்கோணம் நகராட்சியை தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்த தேவையான ஆண்டு வருமானம் ரூ.9.00 கோடிக்கு மேல் உள்ளதாலும், தரம் உயர்த்துவதற்கான அனைத்து வசதிகளும் உள்ளதாக கருதப்படுகிறது. மேற்கூறிய விவரங்களை கருத்தில் கொண்டு, இந்நகராட்சியை முதல் நிலை நகராட்சியிலிருந்து தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்த நகரமன்றத்தின் ஒப்புதல் பெற்று ஏற்கனவே அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்நகராட்சி அலுவலக வளாக கட்டிடம் கட்டப்பட்டு 40 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. மேலும் இந்நகராட்சி 17.04.1984 ஆம் ஆண்டு முதல் இது நாள் வரை முதல் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. எனவே எதிர்வரும் காலங்களில் இந்நகராட்சியின் தரம் உயர்த்தப்படும் பட்சத்தில் மேலும் புதிய பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்பதாலும், திட்டப்பணிகள் அதிகரித்து பணிகள் விரிவடைந்துள்ள நிலையில் போதிய இடவசதியை கருத்தில் கொண்டு இந்நகராட்சியின் பழைய கட்டிடத்தை இடித்து புதிய கட்டுமானம் கட்ட அரசுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.455** **நாள். 20.10.2023**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

<u>பொருள் எண். 09</u>

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பகுதிகளில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி வளர்ச்சி திட்டம் 2022 – 2023 ஆம் ஆண்டின் கீழ் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின்விசை பம்பு அமைக்கும் 2 எண்ணிக்கையிலான பணிக்கு மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பெருந்தலைவரின் செயல்முறைகள் இராணிப்பேட்டை மாவட்டம் அவர்களின் கடித செயல்முறை ந.க.எண். அ4/3172/2022 நாள்.01.08.2023ல் ரூ.4.20 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **பணியின் விவரம்** | **மதிப்பீடு இலட்சத்தில் ரூ.** |
|---|---|---|
| 1 | Drilling of Deep Borewell and Installation of Mini Power Pump at Nanaumian Saibu Street, Ward No.10), at Ambedkar Nagar in Arakkonam Municipality | 2.10 |
| 2 | Drilling of Deep Borewell and Installation of Mini Power Pump at Anthoniar Street, Ward No.10), at Ambedkar Nagar in Arakkonam Municipality | 2.10 |
| | **மொத்தம் ரூ** | 4.20 |

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்

(ந.க.எண்.825/2023/இ1)

**தீர்மானம் எண்.456** **நாள். 20.10.2023**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் பதிவு அனுமதிக்கப்பட்டது,**

**பொருள் எண். 10**

இந்நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி வளர்ச்சி திட்டத்தின்கீழ் 2022 – 2023 ஆம் **ஆண்டு** கீழ் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின்விசை பம்பு அமைக்கும் கீழ்காணும் பணிக்கு 13.09.2022 தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதற்கு. கீழ்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வஎண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | ஒப்பந்ததாரர் பெயர் | அதிக சத விகிதம் |
| 1 | Drilling of Deep Borewell and Installation of Mini Power Pump at Nanaumian Saibu Street, Ward No.10 at Ambedkar Nagar in Arakkonam Municipality | ரூ.2.10 | V.சதீஸ்குமார் | –0.06% | K.முனுசாமி | 0.09% |
| 2 | Drilling of Deep Borewell and Installation of Mini Power Pump at Anthoniar Street, Ward No.10 at Ambedkar Nagar in Arakkonam Municipality | ரூ.2.10 | V.சதீஸ்குமார் | –0.06% | K.முனுசாமி | 0.09% |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்து வழங்கிய ஒப்பந்தபுள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கவும், அதற்கான செலவினத்தொகையை வழங்கவும், மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.825/2023/இ1)**

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.457** **நாள். 20.10.2023**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

**பொருள் எண். 11**

அரக்கோணம் நகராட்சி பகுதிகளில் உள்ள நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசுப் பள்ளிகளில் 2021–2022 ஆம் ஆண்டிற்கு கழிப்பறை சுத்தம் செய்தல் மற்றும் தூய்மை பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் (**Outsourcing**) 14 தற்காலிக பணியாளர்களை வைத்து பணியில் ஈடுபடுத்த 01.02.2021 முதல் 16.02.2022 வரை பணி உத்திரவு வழங்கப்பட்டு, மேற்காணும் பணி உத்திரவு 16.02.2022 முடிவடைந்துள்ளது. அதனை தொடர்ந்து பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் மூலம் 17.02.2022 முதல் 30.09.2023 வரை ஏற்கனவே அளித்துள்ள விலைப்புள்ளி விகிதத்திலே பணியினை மேற்கொள்ள நகரமன்ற அனுமதியுடன் தொடர் நீட்டிப்பு செய்து பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. தற்போது பணி நீட்டிப்பு காலம் முடிவடையும் நிலையில் உள்ளதால் பணியின் அவசரம் அவசியம் கருதி பணி நீட்டிப்பு காலத்தை 01.10.2023 முதல் 31.12.2023 வரை மூன்று மாதங்களுக்கு ஏற்கனவே வழங்கி வரும் அதே தொகையில் அந்நிறுவனத்திற்கு நீட்டிப்பு செய்து கொள்ளவும், அதற்கான செலவின தொகை ரூ.3.50 இலட்சத்தினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நகர மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர மன்ற தலைவரின் முன்

அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டதை நகர மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுதிக்கலாம்.

(ந.க.எண்.483/2023/எச்1)

**தீர்மானம் எண்.458** நாள். 20.10.2023

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

**<u>பொருள் எண். 12</u>**

அரக்கோணம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முடிக்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மராமத்து பணிகள் செய்யப்பட்டு வருகிறது. நகரில் மொத்தம் 7 இடங்களில் கழிவுநீர் உந்து நிலையம் அமைக்கப்பட்டு, அதன் மூலம் சில்வர்பேட்டை பகுதியில் அமைந்துள்ள 11.00 எம்.எல்.டி. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்பட்டு கழிவுநீர் சுத்திகரிப்பு செய்து அருகில் உள்ள ஏரியில் விடப்படுகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் நாள் 19.12.2020 ந.க.எண். 26880/2018/UGSS –ல் நகராட்சிக்கு அருகில் உள்ள ஊராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளிலிருந்து தனியார் லாரிகள் மூலம் சேகரிக்கப்படும் நச்சுத்தொட்டி கழிவுநீரினை பொதுமக்களுக்கு எந்த விதமான சுகாதாரக் கேடுகள் ஏற்படாதவாறு, முறையாக லாரி உரிமையாளர்களைக் கண்டறிந்து, நகராட்சியில் பதிவு செய்து, அதற்குண்டான சர்வீஸ் கட்டணம் நிர்ணயம் செய்து, பராமரிக்கப்படும் கழிவுநீர் உந்து நிலையத்தில் லாரி உரிமையாளர்கள் வந்து நகராட்சி நச்சுத் தொட்டியில் கழிவுநீரினை ஊற்றி விட்டுச்செல்ல உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டது.

மேற்காணும் அறிவுரைகளின்படி நகராட்சிப் பகுதிகளில் உள்ள ஏதேனும் ஒரு கழிவுநீர் உந்து நிலையத்தில் (Pumping Station) நச்சு நீர் சேகரம் தொட்டி அமைக்க Type 1 மதிப்பீட்டு தொகை ரூ.9.90 இலட்சம் தயார் செய்யப்பட்டு நகரமன்ற தீர்மான எண்.129 நாள் 30.06.2022 நிர்வாக அனுமதி பெறப்பட்டு மேற்படி பணியினை குறிஞ்சு நகர் கழிவுநீர் உந்து நிலையம் பகுதியில் தொடங்குவதற்கு 21.12.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய A.V.எண்டர்பிரைசஸ் காஞ்சிபுரம் என்பவருக்கு நகரமன்ற தீர்மான எண். 270 நாள் 30.12.2023 அனுமதி பெறப்பட்டு 30.12.2022ல் பணி உத்திரவு வழங்கப்பட்டது.

இந்நிலையில் A.V.எண்டர்பிரைசஸ் காஞ்சிபுரம் என்பவரின் மூலம் மேற்படி பணியினை குறிஞ்சி நகரில் தொடங்கும் நிலையில் அப்பகுதி மக்களால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு மேற்படி இடத்தில் பணியினை மேற்கொள்ள இயலவில்லை இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் Video Conferencing ஆய்வு கூட்டத்தில் சில்வர்பேட்டை STP வளாகத்தில் (Pumping Station) நச்சு நீர் சேகரம் தொட்டி ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டில் Type 2 Design ல் அமைக்குமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டது.

அதன்படி பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தின் முன் அனுமதி எதிர்நோக்கி நகரமன்றதலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தின் முன் அனுமதி எதிர்நோக்கி நகரமன்றதலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதற்கு அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1207/2022/இ1)**

**தீர்மானம் எண்.459** நாள். 20.10.2023

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

<u>பொருள் எண். 13</u>

இந்நகராட்சியில் 2023-24 ம் ஆண்டு பொதுநிதி / Amrut 2.0 திட்டத்தின் கீழ் 11.10.2023 தேதி கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு. கீழ்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வஎண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1 | <u>பொதுநிதி / Amrut 2.0</u><br>அரக்கோணம் நகராட்சியில் 2023-24 ம் ஆண்டு பொதுநிதி / Amrut 2.0 திட்டத்தின் கீழ் அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான சில்வர் பேட்டை STP வளாகத்தில் பாதாளச் சாக்கடை Lifting station-ல் நச்சு நீர் சேகரம் தொட்டி அமைத்தல் பணி. | 16.00 | A.V.எண்டர்பிரைசஸ் காஞ்சிபுரம். | -0.03% | C.பத்மநாபன் | 0.04% |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கவும், அதற்கான செலவினத்தொகையை வழங்கவும், மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.1207/2022/இ1)**

**தீர்மானம் எண்.460** **நாள். 20.10.2023**

**அலுவலக குறிப்பு :- மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

<u>பொருள் எண். 14</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 13277/2023/அம்ரூத் 1-1 நாள் 13.09.2023 தேதிய கடிதத்தில் அம்ரூத் திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின் படி நீர்நிலைகள் புனரமைத்தல் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை சமர்பிக்க தெரிவிக்கப்பட்டது. அதன்படி அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.35 சர்வே வார்டு எண்: D, பிளாக் : 7, T.S.No.10ல் அமைந்துள்ள குளம் தற்போது உள்ள ஆக்கிரமிப்பு இல்லாத பகுதிகளில் புனரமைப்பு பணியினை மேற்கொள்ளவும், இனி வரும் காலங்களில் மேற்கொண்டு புதிய ஆக்கிரமிப்புகள் ஏதும் ஏற்படா வண்ணம் தடுக்கும் பொருட்டும், மேற்படி குளத்திற்கு அம்ரூத் திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின் படி நீர்நிலைகள் புனரமைத்தல் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை அரசுக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது. என்ற விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்

**(ந.க.எண்.1172/2023/இ1)**

**தீர்மானம் எண்.461** **நாள். 20.10.2023**

**அலுவலக குறிப்பு :- மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது,**

<u>பொருள் எண். 15</u>

அரக்கோணம் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்படும் XEROX இயந்திரம் பழுதடைந்து அலுவலக பணிக்காக XEROX நகல் எடுக்க சிரமாக உள்ளது. எனவே நிர்வாக நலன் கருதி HP அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்,சென்னை நிறுவனத்தின் மூலம் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| S.No | Description | Quantity | Amount / Per Unit |
|---|---|---|---|
| 1 | Developer Unit | 1 | 4610 |
| 2 | Fuser | 1 | 7525 |
| 3 | TR Roller | 1 | 1070 |
| | | Total | 13205 |
| | | GST 18% | 2377 |
| | | GRAND TOTAL | 15582 |
| | | Service Chgs | 1400 |
| | | G.Total | 16982 |

மேற்காணும் விவரப்படி ரூ.16982/-யினை HP நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.462** **நாள். 20.10.2023**

**அலுவலக குறிப்பு :- மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

(ஒம்)/-திருமதி.லட்சுமி பாரி,
நகரமன்ற தலைவர்
அரக்கோணம் நகராட்சி

**// உண்மை நகல் //**

ஆணையர்
அரக்கோணம் நகராட்சி.